

தமிழ்ப் புத்தாண்டு, தமிழர் திருநாள், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட விருப்பாச்சியில் மத்திய,மேற்கு ஒன்றியங்களின் இளைஞரணி, மாணவரணி, விளையாட்டு மேம்பாட்டு அணி இணைந்து நடத்தியகிரிக்கெட் போட்டியை துவக்கி வைத்து வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கினார் . உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி.இந்நிகழ்வின்போது மாவட்ட துணைச் செயலாளர் இராஜாமணி, ஒன்றிய செயலாளர் பாலு, மாவட்ட பிரதிநிதி சண்முகம், ஒன்றிய அவைத்தலைவர் செல்வராஜ், ஒன்றிய துணைச் செயலாளர்கள் முருகானந்தம், சிவபாக்கியம் ராமசாமி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஹரிஹரசுதன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அசோக் வேலுச்சாமி, உள்ளிட்டசார்பு அணி நிர்வாகிகள் பொதுமக்கள் உடனிருந்தனர்.



இலங்கை அரசால் தொடர்ந்து வஞ்சிக்கப்படும் தமிழக மீனவர்களில் அதிகம் பாதிக்கப்படுவது இராமநாதபுரம் மாவட்ட மீனவர்கள் தான் அந்த வகையில் சமீப காலமாக இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள இராமேஸ்வரம் தங்கச்சிமடம் பகுதியைச் சேர்ந்த 70க்கும் மேற்பட்ட மீனவ குடும்பங்களை இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், நேரில் சந்தித்து தனது சொந்த நிதியிலிருந்து நிதியுதவி அளித்து ஆறுதல் கூறியதுடன் விரைவில் விடுதலை செய்ய தமிழ்நாடு முதல்வர் தலைமையில் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.





